# *Gates Industrial Corporation plc*
# *நலன் முரண்பாடு கொள்கை மற்றும் வெளிப்படுத்தல் நடைமுறைகள்*

**பொதுவாக**

*ஓர் ஊழியரின் தனிப்பட்ட, சமூக அல்லது நிதி சார்ந்த நலன்கள் கேட்ஸ் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் பிஎல்சி (“Gates” அல்லது “நிறுவனம்”) -இன் சிறந்த நலனுக்காகச் செயல்படும் அவரது திறனில் ஏதேனும் வழியில் குறுக்கிடும்போது (அல்லது குறுக்கிடுவதாகத் தோன்றும்போது) ஒரு ஆதாய முரண்பாடு எழுகிறது. எல்லா ஊழியர்களும் Gates-இடம் தங்களுக்கு உள்ள பொறுப்புகளை நிறுவனத்தின் சிறந்த நலன் எது என்பதன் அடிப்படையில், தனிப்பட்ட ஆதாயங்களை அல்லது உறவுகளைச் சார்ந்திராமல் நிறைவேற்ற வேண்டும். இயக்குநர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு Gates இன் வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் அல்லது போட்டிநிறுவனங்களிடம் நிதி ரீதியான நலன் இருக்கக் கூடாது. நீதி ரீதியான நலன் வகைகளில் மிகப் பொதுவானவை, பங்குகள், பங்குரிமை, பத்திரங்கள் அல்லது குறிப்புகளைச் சொந்தமாக வைத்திருத்தல், தொழிற்கூட்டு நலன் அல்லது ஓர் அறக்கட்டளை அல்லது பிற உறவின் மூலம் ஒரு நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருத்தல். ஒரு நிதி ரீதியான நலன், Gates-இல் ஓர் ஊழியருக்கு உள்ள பொறுப்புகளில் நலன் முரண்பாடு எழும் சாத்தியத்தை அல்லது நலன் முரண்பாடு எழும் சாத்தியம் இருப்பதான தோற்றத்தை உருவாக்கும் என்பதால் அது ஒரு பிரச்சினையாக இருக்கலாம். பொதுவாக, நியூயார்க் மற்றும் லண்டன் பங்குச் சந்தைகளில் வர்த்தகம் செய்பவை போன்ற பரந்த உரிமைத்துவம் உள்ள பொது நிறுவனங்களில் பங்குகள் அல்லது பங்குரிமை வைத்திருப்பதால் நலன் முரண்பாடுகள் எழாது - அத்தகைய நிறுவனத்தில் ஊழியர் முடிவுகளை மேற்கொள்ளாத அல்லது கட்டுப்படுத்தாத பட்சத்தில். நிறுவனத்தின் இயக்குநர்கள் என்ற முறையில் தங்கள் பொறுப்பாண்மை சார்ந்த கடமைகளை இயக்குநர்கள் நிறைவேற்ற வேண்டும்.*

*இந்த ஆவணம் சாத்தியமான முரண்பாடுகளை வெளிப்படுத்துவதற்கான நடைமுறைகளை முன்வைக்கிறது, அவை அனைத்து Gates இயக்குநர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும் பொருந்தும். இந்த நடைமுறைகளின்படி அனைத்து ஆதாய முரண்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.*

**தேவைப்படும் வெளிப்படுத்தல்கள்**

*நீங்கள் ஒரு நலன் முரண்பாடு இருப்பதாக நிறுவனம் நம்புகிறதா இல்லையா என்பது பற்றி ஒரு தீர்மானத்தைப் பெற, ஏற்பட வாய்ப்புள்ள எந்த முரண்பாடுகளையும் Gates சட்டத் துறையிடம் வெளிப்படுத்த வேண்டும்.*

### **1.1** ***நிறுவனத்தின் பரிவர்த்தனைகள்***

*நீங்கள் ஒரு பரிவர்த்தனையில் செல்வாக்கு செலுத்தும் நிலையில் இருந்தால் மற்றும் அப்பரிவர்த்தனை உங்களுக்கு, உங்கள் வாழ்க்கைத்துணை, உடன்பிறந்தவர்கள், பெற்றோர், திருமண வழி உறவினர்கள், பிள்ளை, உங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய தனிப்பட்ட நண்பருக்கு (அத்தகைய எந்த நபரும், "தொடர்புடைய தரப்பு") தனிப்பட்ட ஆதாயத்தை ஏற்படுத்தலாம் என்றால்,*

நிறுவனத்தின் பரிவர்த்தனையை நீங்கள் வெளிப்படுத்தியாக வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனப் பரிவர்த்தனை பின்வரும் சூழ்நிலைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும்:

(i) நீங்கள் அந்தப் பரிவர்த்தனையால் நிதி ரீதியாகவோ வேறு விதமாகவோ நன்மையடைவீர்கள் என்றால்;

(ii) பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பானது ஒரு தொடர்புள்ள தரப்பாக இருந்தால்; அல்லது

(iii) உங்களுக்கு அல்லது ஒரு தொடர்புள்ள தரப்புக்கு, அந்தப் பரிவர்த்தனையின் எதிர்த்தரப்பில் ஒரு நிதி ரீதியான உரிமைத்துவ நலன் இருந்தால்.

### 1.2 வேலைவாய்ப்பு முடிவுகள்

பின்வரும் எதையும் நீங்கள் வெளிப்படுத்தியாக வேண்டும்:

(i) நீங்கள் ஒரு தொடர்புள்ள தரப்பு சம்பந்தப்பட்ட ஒரு வேலையளிப்பு முடிவை மேற்கொள்ளும் அல்லது அந்த முடிவில் செல்வாக்கு செலுத்தும் இடத்தில் இருந்தால்;

(ii) நீங்கள் நிர்வகிக்கின்ற அல்லது மேற்பார்வையிடுகின்ற அல்லது மற்றவகையில் உங்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுகின்ற வணிகக் குழுவில் உள்ள ஒரு பதவிக்கான பரிசீலனையின் கீழ் ஒரு தொடர்புடைய தரப்பு இருந்தால்; அல்லது

(iii) நிறுவனத்தில் உங்களிடமிருந்து வழிகாட்டுதல்களைப் பெறுகின்ற அல்லது பெறக்கூடிய உங்களுக்குக் கீழ் பணிபுரியும் ஓர் ஊழியர் அல்லது தனிநபருடன் உங்களுக்குக் காதல் உறவு ஏற்படுகிறது.

### 1.3 நிறுவனத்திற்கு வெளியிலான நடவடிக்கைகள்

ஊழியர்கள் பணிசாரா நேரங்களில் சட்டபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதில் Gates-க்கு ஆர்வம் இல்லை என்றாலும், தங்கள் வெளி நடவடிக்கைகள் நிறுவனத்திடம் தங்களுக்கு உள்ள பொறுப்புகளுடன் முரண்படவில்லை அல்லது அவற்றில் குறுக்கிடவில்லை அல்லது பிற வகையில் Gates-ஐ மோசமாகக் காட்டவில்லை என்பதை ஊழியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக, நிறுவனத்தின் ஒப்புதல் இல்லாமல் நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யக் கூடாது:

- Gates இயங்குவது போன்ற ஒரு துறையில் அல்லது அதற்குப் போட்டியாக சுயதொழிலில் அல்லது ஊதியப் பணியில் அல்லது ஊதியமற்ற பணியில் ஈடுபடுதல்;
- உரிமைத்துவம் உள்ள அல்லது ரகசியக்காப்புள்ள நிறுவனத் தகவல்களை சொந்த ஆதாயத்திற்கோ நிறுவனத்திற்குத் தீங்கு ஏற்படும் வகையிலோ பயன்படுத்துதல்;
- நிறுவனத்தின் கொள்கைகளின் கீழ் அனுமதிக்கப்படும் சிறு அளவுப் பயன்பாடு தவிர நிறுவன சொத்துக்களை அல்லது உழைப்பை சொந்தப் பயனுக்காகப் பயன்படுத்துவது; அல்லது
- நிறுவனத்திற்கு விற்கும் அல்லது குத்தகைக்கு விடும் நோக்கத்துடன் எந்த வித சொத்துக்களிலும் எந்த நலனையும் வாங்குதல்.

## புகாரளிப்பதற்கான பொறுப்புகள்

உங்கள் மேற்பார்வையாளரிடம் ஒரு சாத்தியமான நலன் முரண்பாட்டை நீங்கள் முதலில் சுயமாக வெளிப்படுத்த வேண்டும். பின்னிணைப்பு A (“படிவம்”) என கீழே இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, அதை உங்கள் மேற்பார்வையாளரிடம் மீளாய்வு செய்ய வேண்டும். உங்கள் மேற்பார்வையாளர் ஒப்புதல் அளித்தால், சுட்டிக்காட்டப்படும் படிவத்தில் அவர் கையொப்பமிட வேண்டும். உங்கள் மேற்பார்வையாளர் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால், நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது (மேலும் நீங்கள் படிவத்தை கேட்ஸ் சட்டத் துறையிடம் சமர்ப்பிக்கத் தேவையில்லை).

உங்கள் மேற்பார்வையாளர் ஒப்புதல் அளித்தால், கையொப்பமிடப்பட்ட படிவத்தை Compliance@gates.com -இல் சமர்ப்பிக்க வேண்டும், மேலும் நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ***முன்னர்*** Gates சட்டத் துறையிடம் இருந்து அனுமதி பெற வேண்டும்.

மேற்பார்வையாளர்கள் தங்கள் நேரடி அறிக்கைகள் இந்த வெளிப்படுத்தல் செயல்முறையை அறிந்திருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் சாத்தியமான ஆதாய முரண்பாடுகள் Gates சட்டத் துறையால் தீர்க்கப்பட்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

வருடாந்திர ஆதாய முரண்பாடு வெளிப்படுத்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக அனைத்து முரண்பாடுகளையும் மறுவெளியீடு செய்ய அல்லது மறுஉறுதிசெய்ய ஊழியர்களைக் கோருவதற்கு Gates க்கு உரிமை உள்ளது. நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, பாலிசிடெக் (PolicyTech) அல்லது பிற மின்னணு வழிமுறைகளைப் பயன்படுத்தி முரண்பாடுகளை ஒப்புக்கொள்வதும் வெளிப்படுத்துவதும் இந்தச் செயல்முறையில் அடங்கும்.

*பின் இணைப்பு A ஐ ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யவும்*

**APPENDIX A**

**Conflict of Interest Disclosure Form**

**Instructions: Please fill out each section of the form and submit it to compliance@gates.com.**

**SECTION I – Employee's Information**

| | |
|---|---|
| Disclosure Date | |
| Employee Name | |
| Employee Job Title and Location | |
| What is the potential conflict of interest? (Select the type of conflict and complete the required details below) | ☐ Company Transaction ☐ Employment<br>☐ Activities Outside The Company |

**SECTION II – Details of the Potential Conflict of Interest**

***A. Complete if you selected "Company Transaction"***

| | |
|---|---|
| Describe the proposed transaction. What is transaction value? Duration? Location of performance? | |
| Do you have a personal interest in the transaction, or does a Related Party have an interest in the transaction? Please explain. | |
| What is your relationship with the Related Party, if applicable? | |
| Will you be responsible for the oversight, administration or financial approvals of the transaction? Please explain. | |
| Will a competitive bidding process be used to select the counterparty? | |

***B. Complete if you selected "Employment"***

| | |
|---|---|
| Describe the potential conflict (e.g. hiring decision, reporting relationship). | |

| | |
|---|---|
| Who is the Related Party? And what is your relationship with the Related Party, if applicable? | |

***C. Complete if you selected "Activities Outside The Company"***

| | |
|---|---|
| Describe the Activities. | |
| Will the Activities involve any Gates' customer, supplier or competitor? | |
| Confirm that no activities will be done during your working hours with Gates. | |
| Confirm that you will not use Gates' resources, labor or assets (e.g., Gates-issued computer, confidential information, etc.) for the activities. | |

**SECTION III – Resolving the Conflicts**

| | |
|---|---|
| What steps can be taken in order resolve or prevent the conflict? | |

________________________________
Employee's Signature
Date:

**Approved by:**

________________________________
Employee's Supervisor
Date:

________________________________
Gates Law Department
Date: